உமையாள்புரம் அருகே படகு விபத்து

*248 வினு—திரு. என். எஸ். வி. சித்தன்,
டாக்டர் எச். வி. ஹாண்டே,
திரு. கே. விநாயகம்,
திரு. வி. கே. கோதண்டராமன்,
திரு. ஆ. கு. சுப்பையா : } மாண்புமிகு

முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உமையாள்புரம் அருகே 10—7—1968-ல் ஏற்பட்ட படகு விபத்தில் எத்தனை பேர் மாண்டனர் ?

(இ) இது போன்ற விபத்துக்களைத் தவிர்க்க அரசு எடுத்துக்கொண்டுள்ள முன்னேற்பாடுகள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிரி வட்டம், ஸ்ரீராமசமுத்திரம் அருகில் 1968 ஜூலை 10-ம் நாள் நடந்த படகு விபத்தில் 23 பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ) இனிமேல் இத்தகைய விபத்துக்களைத் தவிர்ப்பதற்காகச் சில முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்துத் தெரிவித்துள்ளார். அவை அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளன.

திரு. கே. விநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் படகு விபத்திலே பலர் இறந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. படகிலே இத்தனை பேர்தான் ஏறலாம், இதற்குமேலே அந்தப் படகு பளு தாங்காது, என்று விதிமுறைகள் இருக்கும்போது, அந்த இடத்தில் அதிகாரிகள் இல்லையா ? அந்த அதிகாரிகள் என்ன செய்தார்கள் ? அவர்கள் ஏன் அதிகமான நபர்களை ஏற்றிவிட்டார்கள் ? அப்படி அதிகமான நபர்களை ஏற்றிவிட்டதன் பயனாகத்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்த இடத்தில் அதிகாரிகள் இல்லை. அப்படகில் 20 பேர்கள் மாத்திரம்தான் ஏறிச் செல்லலாம். விபத்து நடந்த நேரத்தில் 21 ஆண்களும், 52 பெண்களும் அந்தப் படகில் ஏறியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு ஓர் அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையின் முடிவானது :—

1. பரிசல் பழமையாக இருந்ததாலும், அதில் அநேக துவாரங்கள் இருந்ததாலும், அளவிற்கு மீறிய பிரயாணிகள் அதில் ஏறியிருந்ததாலும் இந்த விபத்து ஏற்பட்டது.

2. பரிசல் ஓட்டுவதற்கான குத்தகை எடுத்துள்ள குத்தகைக்காரர் திரு. மலையாள ராஜா தொட்டியம் பஞ்சாயத்து ஒன்றியத்திற்குக் குத்தகைப் பத்திரம் எதுவும் எழுதிக் கொடுக்காத காரணத்தால் பஞ்சாயத்து ஒன்றியத்தின் அலுவலர்கள் இந்தப் பரிசலின் நிலையை ஆராய்வதற்கும் அதன் குறைபாடுகளைக் கண்டறிவதற்கும், குத்தகைப் பத்திரத்தில் கண்டுள்ள விதிபாடுகள்படி குத்தகைக்காரரை வற்புறுத்துவதற்கும் முடியாமல் போய்விட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு ஏதாவது கொடுக்கப்பட்டதா ? எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த விவரங்கள் மாவட்ட ஆட்சியாளரிடம் இருக்கும். தற்போது கைவசம் இல்லை.

திரு ஜே. ஜேம்ஸ் : பல நதிகளைக் கடந்து செல்வதற்கு இம்மாதிரியான படகுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் பல பழமையானவையாக இருக்கின்றன. ஆகவே, அந்தப் படகுகளை மாற்றி, இம்மாதிரி விபத்து வராமல் தடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வருங்காலத்தில் இதுபோன்ற விபத்துக்கள் ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ளுவதற்கு கீழ்க்கண்ட யோசனைகளை அரசாங்கத்திற்கு விசாரணைக் குழு சிபார்சு செய்திருக்கிறது :—

(1) ஒவ்வொரு துறையிலும் எத்தனை பேர் ஒரு பரிசலில் ஏற வேண்டும், தலைக்கு எவ்வளவு கட்டணம் செலுத்தவேண்டும் என்கின்ற விவரங்கள் அடங்கிய விளம்பரப் பலகைகள் வைக்கவேண்டும். ஒவ்வொரு வருக்கும் அச்சிடப்பட்ட—கமிஷனரின் முத்திரையுடன் கூடிய—டிக்கட்டுகள் வழங்கப்பட்டு, எத்தனை டிக்கட்டுகள் வழங்கப்பட்டன என்பதற்கான கணக்கையும் பேணி வரவேண்டும்.

(2) பரிசல்களையும், பரிசல் துறைகளையும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரோ அல்லது அவரது அலுவலரோ அடிக்கடி பரிசோதனை செய்ய வேண்டும்.

(3) அப்படி சோதனை செய்யப்பட்டதைப்பற்றி மாதம் ஒரு முறை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிக்கை அனுப்பவேண்டும்.

(4) தாசில்தாரோ அல்லது காவல்துறையைச் சேர்ந்த அதிகாரியோ (இன்ஸ்பெக்டர் அளவில்) திடீர்ச் சோதனைகள் செய்யவேண்டும்.

(5) பரிசல்களுக்கும், பரிசல் ஓட்டுபவர்களுக்கும் உரிமம் வழங்கும் முறையை ஏற்படுத்தவேண்டும்.

இப்படிப்பட்ட யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : அந்த விபத்திலே மாண்டவர்களுடைய குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்தால், நஷ்ட ஈடு கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வந்தால் அதுபற்றி அரசு யோசிக்கும்.

திரு எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, அந்தப் பரிசல் துறையில் அந்தப் பரிசல் கடைசி ட்ரிப்பாகச் செல்ல இருந்ததா ? அடுத்த ட்ரிப் இல்லாததால், அதிலே ஏறவேண்டிய எண்ணிக்கைக்கு அதிகமாக, ஏராளமான பொதுமக்கள் ஏறிய காரணத்தால்தான் அது நடுவழியில் கவிழ்ந்துவிட்டது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதனால்தான் அது அவர்களுக்குக் கடைசி ட்ரிப்பாகவே ஆகிவிட்டது.

திரு. எம். சுரேந்திரன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, குத்தகைதாரர் பஞ்சாயத்துக்குக் குத்தகைப் பத்திரம் எழுதிக் கொடுக்காததால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று கூறினார்கள். அப்படியானால், குத்தகைதாரரிடம், குத்தகைப் பத்திரம் எழுதி வாங்கிக்கொள்ளாததும் பஞ்சாயத்தினுடைய தவறுதானே ? பஞ்சாயத்தின்மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதைப்பற்றியும் அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுதுதான் அந்த அறிக்கை வந்துள்ளது. அதையொட்டி இனிமேல் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

திரு. அ. ஆறுமுகம் : இதுமாதிரி அடிக்கடி படகு விபத்து ஏற்படுவதால், அந்த இடத்தில் படகு விபத்து ஏற்படாதவாறு அங்கே உடனடியாக ஒரு பாலம் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கூடுமான வரையில் இத்தகைய நிலைமைகளைத் தவிர்க்க இயன்ற அளவு பாலங்கள் கட்டப்பட்டுக்கொண்டு தான் வருகின்றன.

1969 மார்ச் 10]

திரு. கே. என். குமாரசாமி : குத்தகைதாரர்கள் மூலமாகப் படகுகளை ஓட்டுவதால் விபத்து ஏற்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கிறது என்ற ஒரே காரணத்திற்காகத்தான் குத்தகைதாரர்கள் ஜனங்களுடைய பாதுகாப்பைப் பற்றி எண்ணுவது இல்லை. அப்படிப்பட்ட நிலைமையை அனுசரித்து, இப்படிப்பட்ட துறைகளில் குத்தகைக்கு விடுகின்ற முறையை அரசாங்காம் நீக்குமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : முன்பே குறிப்பிட்டேன். விசாரணைக் குழு அதுபற்றிய சில சிபார்சுகளை அரசுக்குத் தந்திருக்கிறது. அந்த சிபார்சுகளையொட்டி அரசு நடவடிக்கைகள் எடுப்பதுபற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. ஜே. பெள்ளி கௌடர் : ஓடுகின்ற படகுகள் பழுதடையாமல் இருக்கின்றனவா என்று சோதனை செய்ய அதிகாரிகள் உள்ளனரா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அதிகாரிகளெல்லாம் நியமிக்கப் படவேண்டும், இருக்கின்ற அதிகாரிகளை வைத்துக்கொண்டு, மிகுந்த எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றெல்லாம் விசாரணைக் குழு அறிவித்திருக்கிறது.

திரு. கே. விநாயகம் : பெரும்பாலும் அதிகமான மக்கள் இந்தப் படகுகளில் ஏறிச்செல்வது திருவிழாக் காலங்களில்தான். திருவிழாக் காலங்களில் மக்கள் ஒரு கரையிலிருந்து இன்னொரு கரைக்குப் போக வேண்டும் என்ற ஆர்வத்தினால், தமக்கு ஏற்படக்கூடிய விபத்தைக்கூட கவனிக்காமல் வற்புறுத்தி படகுகளில் ஏறிக்கொள்ளுகிறார்கள். ஆகவே, திருவிழாக்காலங்களில் பஸ் பர்மிட் எக்ஸ்ட்ராவாகக் கொடுத்து, விழாவிற்கு வருகிற ஏராளமான மக்களை ஏற்றிச்செல்ல வசதி செய்திருப்பதைப் போல், இந்தப் படகுகளைப் பொறுத்தும் எக்ஸ்ட்ரா பர்மிட் கொடுக்க முடியுமா ? அதைப்பற்றி அரசு யோசித்ததா ? அப்படி ஏற்படுத்தினால் விபத்து வராது என்று அரசாங்கம் நினைக்கிறதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : குத்தகைதாரர்கள் அப்படிக் கேட்பார்களானால், அதிகமான படகுகளை விடுவதற்கு அரசு எந்த மறுப்பும் தெரிவிக்காது.

திரு. கே. பி. எஸ். மணி : இந்த விபத்துகளைத் தடுப்பதற்காக விசாரணைக் குழு தெரிவித்த சிபார்சுகளைப் பரிசீலனை செய்வதோடு, பஞ்சாயத்து யூனியன்களே இந்தப் பரிசல்களை நடத்தலாம் என்பதற்கான உத்தரவை அரசாங்கம் வழங்குமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : பஞ்சாயத்து யூனியன்கள்தான் குத்தகைதாரர்கள் மூலம் இவற்றை நடத்துகின்றன.

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, இந்தப் பரிசல் துறையைக் குத்தகைக்கு எடுக்கிறவர்கள் எத்தனை பரிசல்கள் வேண்டுமானாலும் அந்தத் துறையிலிருந்து விடலாம் என்று இருக்கிறதே, அது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அவைகளெல்லாம் ஒப்பந்தப் பத்திரத்திலே குறிக்கப்படவேண்டிய விஷயங்கள்.

திரு. ஆர் நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, நாட்டுப் படகுகள் அடிக்கடி விபத்துக்குள்ளாகின்றன. எனவே, அவைகளை மாற்றி, நவீன ப்ளாஸ்டிக் படகுகள் விட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆங்காங்குள்ள பஞ்சாயத்து யூனியன்கள் அல்லது குத்தகைக்காரர்கள் நிதி நிலையைப் பொறுத்த விஷயம் அது.

திரு. எம். சுரேந்திரன் : சார், குத்தகைக்கு எடுக்கும்போது, சாதாரண காலங்களில் விடுவதற்கு இத்தனை பரிசல்கள் தேவையாக இருக்கும், விசேஷ, திருவிழாக் காலங்களில் அதிகமான பரிசல்கள் வைத்துக்கொண்டு தான் குத்தகைக்கு எடுக்கவேண்டும் என்ற ஒரு கட்டளை இடப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த யோசனையையும் பரிசீலிக்கலாம்.

Officials of doubtful integrity

*249 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government is contemplating the preparation of a list of officials of doubtful integrity in the service ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, அரசுப் பணியில் உள்ளவர்களில் ஒழுக்க ஐயப்பாட்டுள்ளவர் பட்டியலை மத்திய அரசு தயாரிப்பது போல், இந்த அரசும் விஜிலன்ஸ் கமிஷன் மூலமாகத் தயாரிப்பதற்கு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது அப்படிப்பட்டதொரு முடிவு இல்லை என்று மூலக் கேள்விக்கு விடையளிக்கும்போதே குறிப்பிட்டேன்.

திரு. வ. ஜார்ஜ் : பொதுவாக, ரிடையர்மெண்ட் ஸ்டேஜில் உள்ள அரசாங்க அலுவலர்கள், தங்களுடைய பதவிக்காலம் முடியப் போகிறது, இருக்கிறபோதே சுரண்டிக் கொள்வது லாபம் என்று, ஐயப்படும் முறையில் பெரும்பாலானவர்கள் நடந்துகொள்ளுகிறார்கள். எனவே, அப்படிப்பட்டவர்களை விசேஷமான முறையில் இந்த அரசு கண்காணித்து வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியிலே குற்றச்சாட்டு இருக்கக் கூடாது. விதிகள் தெரிந்தவரே இப்படிக் கேட்கலாமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஓய்வுபெற இருக்கிறவர்கள் மாத்திரமல்ல, உத்தியோகத்திற்கு வந்த ஆரம்பத்திலே கூட தவறு செய்தாலும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டியவர்கள்தான். ஆனால், இந்தக் கேள்வி, என் அந்தப் பட்டியல் வெளியிடப்படவில்லை என்பதைப் பற்றியதாகும். அந்தப் பட்டியலை வெளியிடாமலிருப்பதற்குச் சில காரணங்கள் இருக்கின்றன. அந்தப் பட்டியலில் அதிகாரிகளுடைய பெயர்கள் சேர்க்கப்பட்டுவிடுமானால் சந்தேகத்திற்கு உரியவர்கள் என்று சேர்க்கப்பட்டுவிடுமானால், அவர்கள் எப்படியாவது அறிந்துகொண்டு அந்தக் குற்றங்களிலிருந்து தங்களை மீட்டுக்கொள்வதற்கான வழிவகைகளைக் காணத் தொடங்குவார்கள். சேர்க்கப்படாதவர்கள், தங்கள் பெயர்கள்தான் சேர்க்கப்படவில்லையே என்ற காரணத்தால், தைரியமாகக் குற்றங்களைச் செய்ய ஆரம்பிப்பார்கள். இந்தக் காரணங்களால் அந்தப் பட்டியல் வெளியிடப்படவில்லை.

THIRU T. MARTIN : The cost of living has gone up but the salaries of Government servants are not adequate to the cost of iving. Hence easily they are driven to the temptation of bribery. In the circumstances... ... ...